

காணை தெற்கு , வடக்கு மற்றும் மத்திய ஒன்றிய செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் கொசப்பாளையத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். ஒன்றியச் செயலாளர் கல்பட்டு வி.ராஜா வரவேற்புரையாற்றினார். ஒன்றியப் பெருந்தலைவர் கலைச்செல்வி, ஒன்றியச் செயலாளர்கள் ஆர்.முருகன், ஆர்.பி.முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன் மற்றும் ம.ஜெயச்சந்திரன், இரா.ஜனகராஜ், செ.புஷ்பராஜ், தமா.இளந்திரையன், இராம.கற்பகம், தேன்மொழி, ஜி.இரவிச்சந்திரன், காடுவெட்டி ஏழுமலை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### திண்டுக்கல் கிழக்கு – மேற்கு மாவட்டக் கழகங்கள் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவுப் பேரணி!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் அர.சக்கரபாணி - இ.பெ. செந்தில்குமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!





திண்டுக்கல், ஆக. 4-

திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் 6ஆம் ஆண்டு நினைவு நாள் பேரணி மாவட்டக் கழகத் தோழர்கள் திரளாகப் பங்கேற்குமாறு கிழக்கு - மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் அமைச்சர் அர.சக்கரபாணி, இ.பெ. செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு, திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழ்நாடு வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழ் அறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், உலகே போற்றும் பன்முகப் படைப்பாளியாக, முன்னேற்ற உணர்வோடும் கலந்து, காலம் போற்றும், காவியமாக, என்றும் வரலாற்றில் நிலைத்தப் பதிவாக சமூக நீதி, மக்களின் முன்னேற்றம், சாதிப் பிரிவினைகள் அகற்றம், தீண்டாமை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, நடுத்தர மக்களுக்கு நலத்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிமுகம் செய்து மக்களின் மனதைக் கொள்ளை கொண்டவர்.

பன்முகச் சிறப்பு வாய்ந்த அவர் அகில இந்திய அரசியல் தலைவர்களால் கவரப் பட்டவர். பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு முறையாகத் தீர்வு காணக்கூடியவராக, எப்பேர்ப்பட்ட கடினமான சிக்கல் வாய்ந்த பிரச்சினைகளாக இருந்த போதும் அதைத் தீர்த்து வைக்கக் கூடியவராக தலைவர் கலைஞர் அவர்கள் விளங்கினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்து முதலமைச்சர்களுக்கும், பல்வேறு கட்சித் தலைவர்களுக்கும் முன்மாதிரியாக, ரோல் மாடலாக, தலைவர் கலைஞர் அவர்கள் இருந்துள்ளார்கள்.

முத்தமிழின் முகவரியாக, புகழ்ச்சின்னமாக ஒளி வீசும் தலைவர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாளினையொட்டி 07.08.2024, புதன்கிழமை அன்று திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் உள்ள அனைத்து மாநகரம், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள், வார்டு மற்றும் கிளைக் கழகங்கள் தோறும் அனைத்து இடங்களிலும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செய்து வீரவணக்கம் செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

### தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள் புகழஞ்சலி!

## மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை



பட்டுக்கோட்டை, ஆக 4-

தஞ்சை தெற்கு மாவட்டக் கழக தி.மு.க சார்பில் நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு நாள் புகழஞ்சலி குறித்து

மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ குறித்து விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

வருகின்ற 7.8.2024-புதன் கிழமை காலை 9.00 மணியளவில் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தஞ்சை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள். தலைமை கழக நிர்வாகிகள், செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள். மாவட்ட கழக நிர்வாகிகள். ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு:

அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் அனைத்து பகுதிகளிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்த உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு-தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் கா. அண்ணாதுரை எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### திருவள்ளூர் ஒன்றியம்

# பெருமாள்பட்டு - வேப்பம்பட்டு பகுதியில் நியாய விலைக் கடை!

## பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி திறந்து வைத்தார் !

திருவள்ளூர் ஆக 04;

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்ட மன்ற தொகுதி உட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம் பெருமாள்பட்டு வேப்பம் பட்டு பகுதியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க கீழ் இயங்கும் முழு நேரம் நியாய விலை கடை திறப்பு விழா நடைபெற்றது

இதில் கூட்டுறவு சங்கத் தலைவர் இரா.வாசு, தலைமை தாங்கினார் ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆர்.ஜெயசீலன், சே. பிரேம் ஆனந்த் பொதுக் குழு உறுப்பினர் த.எத்திராஜ், துணைப்பதிவாளர் ரவி சார் பதிவாளர்கள் சண்முகம் விஜய வேலன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்கள்

ஊராட்சி மன்ற தலைவர் ராஜேஸ்வரி சேகர், வரவேற்புரையற்றினார் இந்நிகழ்ச்சியில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நியாய விலை கடைகள் திறந்து வைத்து பயனாளிகளுக்கு பல்வேறு பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார்

இதில் மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.பரமேஸ்வரன், இ.என்.சேகர், ஆர்.திலிப் ராஜ், மு.ராஜா, நிர்வாகிகள் எஸ்.சௌந்தரராஜன், திராவிட தேவன், பார்த்தசாரதி, நடராஜன், எம்.சக்திவேல், கஜேந்திரன், கோபிகிருஷ்ணன், ராஜேசேகர், ரமேஷ், ராஜா(எ)ஏழுமலை, ராஜாராம், ஜெகதீசன், டில்லி, தாஸ், முரளி, தங்கராஜ், பரந்தாமன், அஜந்தா, லட்சுமி, ரமேஷ், பரமசிவம், மோகன், ஜெய்சங்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் எஸ்.குளவாய்ப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த சலவைத் தொழிலாளர் தம்பதியரின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு அரசு சமூக நலத்துறை மூலம் வழங்கப்பட்ட சலவை இயந்திரத்தை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அலுவலகத்தில் வைத்து பயனாளர்களிடம் வழங்கினார். என் நிகழ்வுகளில் ஆலங்குடி பேரூர் செயலாளர் ஆ.பழனி குமார், கீரமங்கலம் பேரூராட்சி தலைவர் கே.சி.சிவக்குமார், கே.வி.சுப்பையா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம், கங்கைகொண்டசோழபுரம் பிரகதீஸ்வரர் திருக் கோவிலில் மாவட்ட நிர்வாகம், சுற்றுலாத்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மாமன்னன் இராஜேந்திரசோழன் பிறந்த நாள் ஆடித் திருவாதிரை விழாவினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேற்று முன்தினம் (02.08.2024) துவக்கி வைத்து, உரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ச.செல்வராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

# பழனி, அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கான கால்கோள் விழா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்று தொடங்கி வைத்தார்!

திண்டுக்கல், ஆக. 4-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (03.08.2024) பழனி, அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கான கால்கோள் விழாவில் கலந்து கொண்டு மாநாட்டு அரங்கிற்கான பந்தல் அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தார்.

2024 ஆகஸ்ட் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நடைபெறுகிறது. ஆய்வரங்கள், அறுபடை வீடுகளின் அரங்கங்கள், சிறப்பு புகைப்படக் கண்காட்சி. வேல் அரங்கம், 3டி தொழில்நுட்பத்துடன் கூடிய காட்சியரங்கம். கலை மற்றும் இசை நிகழ்ச்சிகள், கருத்தரங்கம் போன்ற அம்சங்களுடன் அமைக்கப்படும் இம்மாநாட்டில் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து முருக பக்தர்கள் ஆன்மிகப் பெரியோர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். மேலும் தமிழ்க் கடவுள் என போற்றப்படும் முருக பெருமானின் பெருமைகளை உலகறியும் வகையில் பறைசாற்றியவர்களை சிறப்பிக்கும் வகையில் 15 முருகனடியார்களின் பெயரில் விருதுகள் வழங்கி சிறப்பு செய்யப் பட உள்ளது.

அதனையொட்டி, பழனி, அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி வளாகத்தில் மாநாட்டு பந்தல், காட்சி அரங்கங்கள், உணவுக் கூடம் போன்றவற்றை அமைக்கும் பணிகளுக்கான கால்கோள் விழா இன்று (03.08.2024) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் கலந்து கொண்டு மாநாட்டுப் பந்தல் அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் தவத்திரு திருவண்ணாமலை ஆதீனம் பொன்னம்பல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், தவத்திரு திருக்கயிலாய பரம்பரை, பேரூர் ஆதீனம் முனைவர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், தவத்திரு சிரவை ஆதீனம் குமரகுருபரசுவாமிகள், தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், தவத்திரு இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பெ.செந்தில் குமார், எஸ்.காந்திராஜன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் அ.பிரதீப், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி சி. ஹரிப்ரியா, தலைமை பொறியாளர் பொ.பெரியசாமி, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் ச. இலட்சுமணன், பொ.ஜெயராமன், கார்த்திக், செ.மாரிமுத்து, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் க.சந்திரமோகன், அறங்காவலர்கள் ச.மணிமாறன், கே. எம்.சுப்பிரமணியன், ரா. ராஜசேகரன், திருமதி ஜெ.சத்யா மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நீர் வளத்தைப் பாதுகாக்கும்

# ஒன்றிய அரசின் முன் முயற்சிகளில் முன்னேற்றம் உண்டா?

## மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 4 -

நீர் வளத்தைப் பாதுகாக்கும் ஒன்றிய அரசின் முன் முயற்சிகளில் ஏதேனும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என மக்களவையில் அரக்கோணம் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி எழுப்பினார்.

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 01 ஆகஸ்ட் 2024 அன்று மக்களவையில், தொழில் துறையினர், விவசாயிகள் மற்றும் அனைத்து தரப்பினரும், நீர் வளத்தை பாதுகாக்கும் வகையில், ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா? என்றும், அதன் விபரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் மாண்புமிகு நீர்வளத் துறை இணையமைச்சர் ராஜ் பூஷன் சௌத்ரி அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் நீர்வளத் துறை அமைச்சர்அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:

நீர் வளத்தின் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு, ஆகியன மாநில பட்டியலில் உள்ளது என்றும், ஆனால் பல்வேறு திட்டங்களின் உதவியுடன், நீர் பாதுகாப்பு, மற்றும் மேலாண்மைக்கு ஒன்றிய அரசு, தேவையான தொழில் நுட்ப உதவிகளையும், நிதி உதவிகளையும் பல்வேறு மாநில அரசுகளுக்கு வழங்கி வருகின்றது என்றும், நீரை பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வு முகாம்கள், சரியான முறையில் நீரை பயன்படுத்துதல், நீர்வளப் பாதுகாப்பு ஆகியவற்றின்மூலம், நீர்பாது காப்பில் ஒன்றிய அரசு கவனம் செலுத்தி வருகிறது என்றும், ஒன்றிய புவிநீர் ஆணையத்தின் உதவியுடன், புவிநிர் அளவை பாதுகாக்கும் முயற்சிகளை பல்வேறு மாநிலங்களில் அறிமுகப்படுத்தி வருகின்றது என்றும், கணிணி தொழில் நுட்ப உதவியுடன், அணைகளில் நீரின் அளவினை கட்டுப்படுத்தி வழங்கிட ஒன்றிய அரசு அனைத்த முயற்சிகளையும் எடுத்து வருவதாகவும், ஒன்றிய அரசின் மாண்புமிகு நீர்வளத் துறை இணையமைச்சர் ராஜ் பூஷன் சௌத்ரி அவர்கள் மக்களவையில், திமுக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.

### நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில்

# வயநாடு மாவட்டத்தில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான அத்தியாவசியப் பொருட்கள்!

## மாவட்ட செயலாளர் பா.மு.முபாரக் அனுப்பி வைத்தார்!

நீலகிரி, ஆக. 4-

கேரள மாநிலம், வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவால் மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் வகையில் கேஸ் கட்டர், ஸ்டீல் கட்டர், ஸ்டெச்சர், லைட்ஸ் நாலா, கம்பூட், கையுரை, முகக்கவசம், Dead Body Bags, சானிடைசர், கட்டிங் வீல்ஸ் போன்ற அத்தியாவசய உபகரணங்களை நீலகிரி மாவட்ட திமுக சார்பில், மாவட்ட ஆட்சியரின் வேண்டுகோள் படி குன்னூர் கோட்டாட்சியர் அவர்களிடம் மாவட்ட திமுக செயலாளர் பா.மு. முபாரக் வழங்கி அதனை வயநாடு மாவட்டத்திற்கு அனுப்பி வைத்தார்.

உடன் மாவட்ட அவைத்தலைவர் போஜன், குன்னூர் நகர செயலளார் ராமசாமி, மாவட்ட துணை செயலாளர் லட்சுமி, மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில விளையாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார், மேலூர் ஒன்றிய செயலாளர் லாரன்ஸ், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சதக்கத்துல்லா, செல்வம், தொரை, காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் சுந்தர்ராஜ், ரமேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பத்மநாபன், குன்னூர் நகர அவை தலைவர் தாஸ், நகர துணை செயலாளர் முருகேசன், மாவட்ட பிரதிநிதி மணிகண்டன், கழக நிர்வாகிகள் ரஹீம், அப்தல் காதர், ஆறுமுகம், ரவி, லியாகத்அலி, வஜி, சந்தீப், ஹரி, குமரேசன், ராஜேந்திரன், பிரவின் உட்பட ஏராளமானவர்கள் பங்கேற்றனர்.



தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், திருவையாறு சட்டமன்ற தொகுதியில் கலைஞர் நூலகத்தை தஞ்சை மத்திய மாவட்ட கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தலைமையில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் நா. இளையராஜா, தஞ்சை சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், ஒன்றிய செயலாளர்கள் வை. சிவசங்கரன், கே.எம்.கௌதமன், தஞ்சை மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, திருவையாறு ஒன்றிய குழு தலைவர் கோ.அரசபாகரன், தஞ்சை மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.முகில் வேந்தன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.எஸ்.செந்தமிழ்ச் செல்வன், சி.ஏ.சுரேஷ், எ.ராஜேஷ் கண்ணா, எம்.எஸ்.வெங்கடேசன், எம். கே.கார்த்திக், இ.உதயநிதி, அரிதரன் மற்றும் மாநகர இளைஞரணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.